வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 9.7.2024 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியா-ரஷ்யா உறவுகள், வரவிருக்கும் ஆண்டுகளில் மேலும் வலுப் பெறும் என பிரதமர் திரு நரேந்திர மோடி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
- 3-ஆவது பதவிக் காலத்தில், உலகின் 3-ஆவது பெரிய பொருளாதாரமாக இந்தியாவை உயர்த்தும் குறிக்கோளுடன் அரசு செயல் பட்டு வருவதாகவும், பிரதமர் கூறி உள்ளார்.
- ஜம்மு-காஷ்மீரில் ராணுவ வாகனங்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய கோழைத் தனமான தாக்குதலை குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கண்டித்துள்ளார்.
- வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான கூட்டுக் கல்வி முறை ஒன்றை உருவாக்க, மாநில அரசுகள், ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறி உள்ளார்.

<u>*மோடி-புடின்*</u>

இந்தியா-ரஷ்யா உறவுகள், வரவிருக்கும் ஆண்டுகளில் மேலும் வலுப் பெறும் என பிரதமர் திரு நரேந்திர மோடி நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இன்று மாஸ்கோவில் ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புடினுடன் நடத்திய சந்திப்பின் போது அவர் இவ்வாறு கூறினார். கடந்த 10 ஆண்டுகளில் தாங்கள் 17 முறை சந்தித்து இருப்பதாகவும் கடந்த 25 ஆண்டுகளில், 22 இருதரப்பு கூட்டங்களை நடத்தி இருப்பதாகவும் அவர்

தெரிவித்தார். ஆழமான உறவுகளுக்கு இதுவே சான்றாகும் என்றும் அவர் தெரிவித்தார். கடந்த 40-50 ஆண்டுகளில் இந்தியா, தீவிரவாதத்தை சந்தித்து வருவதால் மாஸ்கோவில் தீவிரவாத தாக்குதல் நிகழ்ந்தால், அதன் வலியை தம்மால் புரிந்து கொள்ள முடியும் என்று திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார். தீவிரவாதத்தின் எல்லா வடிவங்களையும் தாம் எதிர்ப்பதாக அவர் தெரிவித்தார். உலகம் கடந்த 5 ஆண்டுகளில், கொரோனா மற்றும் பல பிணக்குகள் உட்பட பல்வேறு சவால்களை சந்தித்து இருப்பதாக அவர் கூறினார். உலகில் எரிசக்தி சவால் ஏற்பட்ட போது, சாதாரண மக்களின் பெட்ரோல்-டீசல் தேவைகளை நிறைவேற்றுவதில், ரஷ்யாவின் ஆதரவு, இந்தியாவிற்கு பெருமளவில் உதவியதாகவும், எரிசக்தி தொடர்பான இந்தியா-ரஷ்யா உடன்பாட்டினால் உலகச் சந்தையில் ஸ்திரத் தன்மை ஏற்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.இந்தியா-ரஷ்யா ஒத்துழைப்பினால், இந்திய நுகர்வோர் மற்றும் விவசாயிகளுக்கும் நன்மை கிடைத்திருப்பதாக பிரதமர் மேலும் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாஸ்கோவில், பெயர் தெரியாத போர் வீரர் சமாதியில், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். 2-ஆம் உலகப் போரில் உயிர் நீத்த சோவியத் போர் வீரர்களின் நினைவிற்கு, இக்கல்லறை அர்ப்பணிக்கப் பட்டுள்ளது. தொடர்ந்து மாஸ்கோவில் உள்ள அனைத்து ரஷ்ய கண்காட்சி மையத்திற்கும் நேரில் சென்று பார்வையிட்டார். ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புடினும் உடன் இருந்தார்,

***ே□ாடி-ரஷ்யா***

மத்திய அரசு தனது 3-ஆவது பதவிக் காலத்தில், உலகின் 3-ஆவது பெரிய பொருளாதாரமாக இந்தியாவை உயர்த்தும் குறிக்கோளுடன் செயல் பட்டு வருவதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில், இந்திய சமூகத்தினரிடையே உரையாற்றிய அவர், தற்போது எந்தக் குறிக்கோளையும் நிறைவேற்றும் திறன் இந்தியாவிற்கு இருப்பதாகவும் 3-ஆவது பெரிய பொருளாதாரமாக

இந்தியாவை மேம்படுத்துவதில் அரசு 3 மடங்கு வேகத்தில், மும்மடங்கு வலுவுடன் செயல்படும் என்றும் கூறினார். இந்தியா தற்போது உலகின் மிகவும் நம்பகமான டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை வசதிகளை, மக்களுக்கு வழங்குவதாகவும், சமூகத் துறையில், சிறந்த திட்டங்கள் மூலம் மக்களின் அதிகாரப் பங்கேற்பு, மேம்படுத்தப் படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் எட்டப்பட்ட வளர்ச்சியின் வேகம் குறித்து, உலகமே வியப்பு அடைந்திருப்பதாக பிரதமர் கூறினார். உலகெங்கிலும் இருந்து இந்தியாவிற்கு வருவோர், இந்தியாவில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை புகழ்வதாகவும், நாட்டின் உள்கட்டமைப்பு மற்றும் அமைப்பு முறைகளில் மட்டுமின்றி, மக்களின் தன்னம்பிக்கையிலும் பெரிய அளவில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை, தெளிவாக புரிந்து கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

உலகின் செழிப்பிற்கு உரமூட்ட, இந்தியாவும், ரஷ்யாவும், தோளோடு தோள் நின்று பாடுபட்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார். இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதில் ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புடின், சிறந்த தலைமைத் துவம் மூலம் முக்கிய பங்களித்து வருவதாக அவர் பாராட்டினார். இந்தியாவின் புதிய வளர்ச்சி வேகம், உலகின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் முக்கிய அத்தியாயமாகத் திகழும் என பிரதமர் கூறினார். உலக பொருளாரத்தின் வளர்ச்சியில், இந்தியாவின் பங்களிப்பு தற்போது 15 சதவிகதமாக அதிகரித்து இருப்பதாகவும், வரவிருக்கும் காலங்களில் இது இன்னும் அதிகரிக்கும் என்று, அவர் தெரிவித்தார்.

அமைதி, பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திரம் குறித்து இந்தியா பேசும் போது உலகமே அதை கவனிப்பதாக பிரதமர் கூறினார். இந்தியாவும், ரஷ்யாவும், கசான், யேகாட்டெரின்பர்க் ஆகிய இடங்களில் புதிய தூதரகங்களை அமைக்க முடிவு செய்திருப்பதாகவும், இதனால்

இருநாடுகளுக்கும் இடையே பயணம் மற்றும் வர்த்தக உறவுகள் இன்னும் மேம்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

<u>முர்மு</u>

தேசிய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கழக மாணவர்கள் தங்களின் கல்வி மற்றும் அறிவை, மனிதகுலத்தின் நன்மைக்கும், நாட்டின் நன்மைக்கும் பயன்படுத்த வேண்டும் என,குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். இன்று புவனேஸ்வர்-நைசர் உயர்கல்விக் கழகத்தின் 13-ஆவது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், கல்வி என்பது அமிர்தம் போன்றது என்றும், கல்வி என்னும் அமுதத்தை பருகுவோர், சர் சி வி ராமன் போல, இறவா வரம் பெற்றுத் திகழ முடியும் என்றும் கூறினார். அதேசமயம், அறிவியல் தொழில்நுட்பத்தை தவறாக பயன்படுத்தினால், மனித குலத்திற்கே தீமையாக முடியும் என்பதையும் மாணவர்கள் மறந்து விடக் கூடாது என்று அவர் குறிப்பிட்டார்.

<u>தீவிரவாதம்</u>

ஜம்மு-காஷ்மீரின் கத்துவா மாவட்டத்தில் ராணுவ வாகனங்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய கோழைத் தனமான தாக்குதலை குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கண்டித்துள்ளார். தீவிரவாதத்தை அதன் எல்லா வடிவங்களிலும் எதிர்க்க தற்போது மேற்கொள்ளப்படும் போரில் உயிர் தியாகம் செய்த ராணுவ வீரர்களின் குடும்பத்தினர் பால் தாம் பரிவு கொள்வதாகவும் காயம் அடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டுவதாகவும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் குடியரசு தலைவர் கூறி உள்ளார். தீவிரவாத தாக்குதலில் ராணுவ வீரர்கள் ஐவர் உயிர் இழந்தது குறித்து பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் துயரம் வெளியிட்டு உள்ளார். இவர்களின் குடும்பத்தினருக்கு நாடு துணை நிற்பதாகவும் அவர் கூறி உள்ளார். தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும், பிராந்தியத்தில் அமைதி ஏற்படுத்த இந்திய ராணுவத்தினர்

உறுதி பூண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதற்கிடையே, பூஞ்ச் மாவட்டம் கிரிஷ்காட்டி பிரிவில், எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டருகே, பாகிஸ்தானிய ட்ரோன் ஒன்றை இந்திய ராணுவத்தினர் சுட்டு வீழ்த்தி உள்ளனர். ட்ரோன் மூலம் ஆயுதங்கள் மற்றும் போதைப் பொருட்கள் போடப்படுவதை தடுக்கும் வகையில் எல்லைப்புற கிராமங்களில், தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது. ட்ரோன்கள் பற்றி தகவல் கொடுப்பவர்களுக்கு 3 லட்சம் ரூபாய் வெகுமதி அளிக்கப்படும் என ஜம்மு-காஷ்மீர் காவல் துறை அறிவித்துள்ளது.

<u>*பிரதான்*</u>

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலை நோக்குத் திட்டத்தில் கல்வியே முக்கியத் தூண் என்றும், இந்த இலக்கை நிறைவேற்றும் வகையிலான கூட்டுக் கல்வி முறை ஒன்றை உருவாக்க, மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள், ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்றும், மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறி உள்ளார். மாநில மற்றும் யூனியன் பிரதேச அதிகாரிகளின் பங்கேற்புடன், புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையின் மறுஆய்வுக் கூட்டத்தில் பேசுகையில், அவர் இவ்வாறு வலியுறுத்தினார். அனைவருக்கும் தரமான கல்வி வழங்குவதன் மூலம், அறிவுசார் வல்லரசு நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், தேசிய கல்விக் கொள்கையின் அமலாக்கத்திற்கு, முக்கிய இடம் இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். அனைத்து இந்திய மொழிகளிலும்- ஒவ்வொருவருக்கும் அவரவர் தாய் மொழியிலும்- கல்வி அளிக்க, தேசிய கல்விக் கொள்கையில் முக்கியத் துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

**முருகன்**

கூட்ட நெரிசல், விஷச் சாராயம் போன்ற சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களை சென்று பார்ப்பதில் கூட, இந்தியா கூட்டணி தலைவர்கள், தாங்கள் ஆளும் மாநிலம்-ஆளாத மாநிலம் என பேதம் பார்ப்பதாக பிஜேபி குற்றம் சாட்டி உள்ளது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மக்களவை எதிர் கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி உத்தபிரதேசத்தில் கூட்ட நெரிசல் சம்பவம் ஏற்பட்ட ஹத்ராஸ் பகுதிக்கு நேரில் சென்றாரே தவிர, தமிழகத்தில் விஷச் சாராய சம்பவம் நிகழ்ந்த கள்ளக் குறிச்சி பகுதிக்கு வரவில்லை என்று, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் ஆகியோர் தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான கொடுமைகளைப் புறக்கணிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். அண்மையில் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் கொலை செய்யப்பட்டது, மிகவும் துரதிருஷ்டவசமானது என்றும் தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சீர் குலைந்து விட்டதாகவும், டாக்டர் எல் முருகன் குற்றம் சாட்டினார். தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான வன்கொடுமைகள், திமுக ஆட்சியில் அதிகரித்து விட்டதாகவும், மாநிலத்தில் ஆண்டுதோறும் இத்தகைய 2 ஆயிரம் வழக்குகள் பதிவு செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

**சுகாதாரம்**

கேரளத்தில், அமீபா வகையைச் சேர்ந்த கிருமிகளால் ஏற்பட்ட மூளைக் காய்ச்சலுக்கு 4 பேர் பலியாகி இருப்பதைக் கருத்தில் கொண்டு இந்நோயில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான வழி முறைகளை புதுச்சேரி அரசின் சுகாதாரத் துறை வெளியிட்டுள்ளது. தலைவலி, காய்ச்சல், குமட்டல், வாந்தி, கடினமான கழுத்து வலி, மனக் குழப்பம்,

வலிப்பு போன்றவை இந்நோயின் அறிகுறிகள் என்றும் இத்தகைய அறிகுறிகள் ஏற்பட்டால் அருகில் உள்ள அரசு மருத்துவமனை மற்றும் தனியார் மருததுவமனைகளில் சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேங்கி நிற்கும் அழுக்கு நீரில் குளிக்க வேண்டாம் என பொது மக்களுக்கும், நீச்சல்குளம் மற்றும் இதர நீர் நிலைகளை சுத்தமாக பராமரிக்க, உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நபர்களின் வெளியூர் பயணம் பற்றிய விவரங்களைக் கண்டறிய மருத்துவ பணியாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

***விக்கிரவாண்டி***

தமிழகத்தில் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தல் வாக்குப் பதிவு நாளை நடைபெற உள்ளது. இதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு பணியில், துணை ராணுவத்தினர் உட்பட, 3 ஆயிரம் பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தமிழகத்தின் விக்கிரவாண்டி உட்பட, பீஹார், மத்தியபிரதேஷ் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த மொத்தம் 13 சட்டமன்ற தொகுதிகளிலும் இடைத்தேர்தல் வாக்குப் பதிவு நாளை நடைபெற உள்ளது.

***தரவரிசை***

தமிழகத்தில் பிஇ, பிடெக் உள்ளிட்ட பொறியியல் படிப்புகளில் சேருவதற்கான மாணவர் தர வரிசைப் பட்டியல் சென்னையில் நாளை வெளியிடப்பட உள்ளது. இதனைத் தொடர்ந்து, கல்லூரி மற்றும் பாடப் பிரிவை தேர்வு செய்வதற்கான இணைய வழி கலந்தாய்வு தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

***பட்டாசு ஆலை***

சிவகாசி அருகே காளையார்க்குறிச்சியில் இன்று காலை பட்டாசு ஆலை ஒன்றில் நேர்ந்த தீ விபத்தில், 2 தொழிலாளர்கள் உயிர் இழந்தனர். படுகாயம் அடைந்த 1 பெண் உட்பட 2 பேர் சிவகாசி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தீ விபத்து குறித்து தகவல் கிடைத்த உடன் தீ அணைப்பு துறையினர் விரைந்து வந்து தீ பரவா வண்ணம் தடுக்கும் பணியில் ஈடுபட்டனர். விபத்து குறித்து காவல் துறையினர் விசாரித்து வருகின்றனர்.

***கிரிக்கெட்***

மகளிர் கிரிக்கெட்டில், இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான, 3-ஆவது மற்றும் இறுதி 20 ஓவர் போட்டி இன்று இரவு 7 மணிக்கு சென்னையில் நடைபெறவுள்ளது. இத்தொடரில் தற்போது தென்னாப்பிரிக்கா, 1-0 என்ற புள்ளிக் கணக்கில் முன்னிலையில் உள்ளது. மழை காரணமாக 2-ஆவது போட்டி கைவிடப் பட்டது.

***ஹத்ராஸ்***

உத்தரபிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில், கூட்ட நெரிசல் சம்பவத்தில் பல உயிர்கள் பலியானது தொடர்பாக இன்று சிறப்பு புலனாய்வு குழுவினர் அளித்த அறிக்கை அடிப்படையில், சம்பந்தப்பட்ட வட்டாட்சியர், துணைக் கோட்ட மேஜிஸ்டிரேட் உட்பட 6 அதிகாரிகளை, அம்மாநில அரசு, இடை நீக்கம் செய்துள்ளது. நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தவர்களின் அலட்சியப் போக்கே, சம்பவத்திற்கு காரணம் என்றும், உள்ளூர் நிர்வாகத்திற்கும் இதில் முக்கிய பொறுப்பு இருப்பதாகவும், சிறப்பு புலனாய்வு குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவத்தின் பின்னணியில் சதி திட்டம் உள்ளதா என்பதை உடனடியாக மறுப்பதற்கு இல்லை என்றும் இதுகுறித்து ஆழமான விசாரணை தேவைப்படுவதாகவும் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. 2 உறுப்பினர் சிறப்பு புலனாய்வுக்

குழுவினர், கூட்ட நெரிசல் சம்பவம் ஏற்பட்ட இடத்தை, கடந்த 2, 3 மற்றும் 5-ஆம் தேதி நேரில் பார்வையிட்டு, சுமார் 125 பேரிடம் மேற்கொண்ட நேரடி விசாரணையின் அடிப்படையில் இந்த அறிக்கையை தயாரித்துள்ளது.

<u>சமூக நீதி</u>

மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, கல்வி, வேலை வாய்ப்பு, ஆதரவுத் தொழில் நுட்பங்கள் ஆகிய 3 முக்கிய தூண்கள் அவசியம் என்று, மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறைச் செயலர் திரு ராஜேஷ் அகர்வால் கூறி உள்ளார். மாற்றுத் திறனாளிகளுக்கான ஆதரவுத் தொழில் நுட்பங்கள் என்பது குறித்து புதுடெல்லியில் நடைபெற்ற மாநாட்டில் அவர் பேசுகையில் ஆதரவுத் தொழில் நுட்பங்களை மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்குவதன் மூலம், திறன் இடைவெளியைக் குறைக்கவும், மாற்றுத் திறனாளிகளுக்கு இடையே தொழில் முனைவை வளர்க்கவும் ஏதுவாகும் என்றார். மாற்றுத் திறனாளிகளுக்கு, அவர்களின் திறமைகளுக்கு ஏற்ற வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்றும், மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை கொடுப்பதை, சுமையாகக் கருதிவிடக் கூடாது என்றும் திரு அகர்வால் கூறினார். கார்ப்பரேட் நிறுவனங்கள், சிஎஸ்ஆர் திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவ, புதிய வாய்ப்புகளைக் கண்டறிய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.